# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044– 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

**முன்னிலை** : திரு. **மகேசன் காசிராஜன்,** இ.ஆ.ப., (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்
******

**ஆணை எண்: 56 /பேரூ/2025**
**நாள் : 10.07.2025**

திரு. பா. மகேஸ்வரன்,
உத்தமபாளையம்,
தேனி மாவட்டம். – முறையீட்டு மனுதாரர்

தேனி மண்டல பேரூராட்சிகளின்
உதவி இயக்குநர்,
தேனி மாவட்டம். – எதிர் மனுதாரர்

தேனி மாவட்டம், உத்தமபாளையம் வட்டம், க. புதுப்பட்டி, கதவு எண். 35/A-9, மாதாரி தெரு, என்ற முகவரியை சேர்ந்த திரு. பா. மகேஸ்வரன் என்பவரது 21.01.2025 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 22.01.2025 அன்று பெறப்பட்டு, 56/பேரூ/2025 என எண்ணிடப்பட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் மனு கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்டவாறு ஆணை வெளியிடப்படுகிறது.

**<u>ஆணை</u>**

தேனி மாவட்டம், உத்தமபாளையம் வட்டம், க. புதுப்பட்டி, கதவு எண். 35/A-9, மாதாரி தெரு என்ற முகவரியை சேர்ந்த திரு. பா. மகேஸ்வரன் என்பவர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திற்கு அனுப்பிய 21.01.2025 நாளிட்ட புகார் மனுவில் கீழ்க்காணும் புகார்களை தெரிவித்துள்ளார்.

க. புதுப்பட்டி பேரூராட்சியில் துப்புரவு பணியாளராகப் பணிபுரிந்து 19.06.2023 அன்று பணியிடைக்காலமான திருமதி. பா. வெள்ளையம்மாள் என்பவரின் மகன் நான், எனது குடும்பத்தில் வருமானம் ஈட்டிவந்த ஒரே நபரான எனது தாயார் பணியிலிருக்கும் போதே காலமாகிவிட்டதால் எனது குடும்பம் வருமானத்திற்கு வேறு வழியின்றி மிக வறுமையில் உள்ளதால் கருணை அடிப்படையில் கல்வித் தகுதிக்கேற்ப பணிநியமனம் வேண்டி க. புதுப்பட்டி பேரூராட்சி செயல்

அலுவலர் அவர்களுக்கு உரிய அனைத்து அசல் சான்றாவணங்களுடன் 11.12.2023 நாளில் விண்ணப்பம் செய்தேன்.

க. புதுப்பட்டி பேரூராட்சியில், பதிவறை எழுத்தர், அலுவலக உதவியாளர், துப்புரவு மேற்பார்வையாளர் போன்ற பணியிடங்களில் காலிப்பணியிடம் ஏதும் இல்லாததால் உரிய மேல்நடவடிக்கையின் பொருட்டு கருணை அடிப்படையில் பணிநியமனம் வேண்டி எனது விண்ணப்பம் உரிய மேல் நடவடிக்கைக்காக தேனி மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் அவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக க. புதுப்பட்டி பேரூராட்சி செயல் அலுவலரின் கடிதம் ந.க.எண். 169/2024, நாள் 23.05.2024-ன் மூலம் அறிந்தேன்.

தற்போதைய நிலையில் தேனி மாவட்டத்தில் பின்வரும் பேரூராட்சிகளில் கருணை அடிப்படையில் நேரடி நியமனம் மூலம் மட்டுமே நிரப்பப்பட வேண்டிய பதிவறை எழுத்தர் பணியிடத்தில் தவறான முறையில் விதிகளுக்கு புறம்பாக துப்புரவு பணியாளர் பணியிலிருந்து நேரடியாக பதவி உயர்வில் பதிவறை எழுத்தர்களாக நியமனம் செய்யப்பட்ட பின்வரும் மூன்று நபர்களை தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம் வழங்கிய ஆணை எண். 85/பேரூ./2021, நாள் 22.11.2020ன்படி பணியிறக்கம் செய்யப்படாமல் இன்று வரை பணிபுரிந்து வருகின்றனர்.

| வ.எண். | பேரூராட்சியின் பெயர் | விதிகளுக்கு புறம்பாக பதவி உயர்வு வழங்கப்பட்ட பதிவறை எழுத்தர்கள் (திருவாளர்கள் |
|---|---|---|
| 1 | வடுகபட்டி | கணேசன் |
| 2 | வீரபாண்டி | காளியப்பன் |
| 3 | ஓடைப்பட்டி | மாரிச்சாமி |

முறைமன்ற நடுவத்தின் உத்தரவுப்படி மேற்படி நபர்களை பணியிறக்கம் செய்வதால் ஏற்படும் பதிவறை எழுத்தர் பணியிடத்தில் என்னை நியமனம் செய்யவும், இந்நடவடிக்கைகளில் காலதாமதம் ஏற்படுமேயானால் தற்போது காலியாக உள்ள பின்வரும் பணியிடங்களில் நியமனம் வழங்கிடவும் தங்களை பணிவுடன் வேண்டுகிறேன் என்று தேனி மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் அவர்களுக்கு 11.07.2024 அன்று விண்ணப்பித்தேன். அதன்படி,

1. பண்ணைப்புரம் பேரூராட்சியில் காலியாக உள்ள அலுவலக உதவியாளர் பணியிடம் (30.06.2024 திரு. பாலசுப்பிரமணி ஓய்வு பெற்றதால்)
2. அனுமந்தன்பட்டி பேரூராட்சியில் காலியாக உள்ள துப்புரவு மேற்பார்வையாளர் பணியிடம் (30.06.2024 திரு. இராஜசேகரன் ஓய்வு பெற்றதால்)

ஆகவே ஐயா அவர்கள் மேற்கண்டுள்ள விபரங்களின் அடிப்படையில் வறுமையில் வாடும் எனது குடும்பத்தினை காப்பாற்றும் வகையில் ஏதாவது ஒரு பணியிடத்தில் கூடிய விரைவில் எனக்கு கருணை அடிப்படையில் பணி வழங்குமாறு தேனி மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநரிடத்தில் கேட்டுக் கொண்டேன். ஆனால் இதுவரையிலும் முறைமன்ற நடுவத்தின் உத்தரவுப்படி மேற்படி நபர்களை பணியிறக்கம் செய்வதால் ஏற்படும் பதிவறை எழுத்தர் பணியிடத்தில் என்னை நியமனம் செய்யாமலும் அனுமந்தன்பட்டி பேரூராட்சியில் காலியாக

உள்ள துப்புரவு மேற்பார்வையாளர் பணியிடத்திற்கும் (30.06.2024 திரு. இராஜசேகரன் ஓய்வு பெற்றதால்) மற்றும் பண்ணைப்புரம் பேரூராட்சியில் காலியாக உள்ள அலுவலக உதவியாளர் பணியிடம் (30.06.2024 திரு. பாலசுப்பிரமணி ஓய்வு பெற்றதால்) ஏற்பட்ட காலிப் பணியிடத்திற்கும் இதுநாள் வரையிலும் ஏதேனும் ஒரு பணியினை ஒதுக்கீடு செய்து வழங்காமல் காலம்தாழ்த்தி வருகின்ற காரணத்தினால் நான் மன உளைச்சலுக்கு ஆளாகியுள்ளேன். மேலும் எனது குடும்பம் வறுமையில் வாழ்வதால் எனது குடும்பத்தை காப்பாற்ற முடியாமலும் உள்ளது. ஆகவே ஐயா அவர்கள் என் மீது கருணை கொண்டு விரைவில் மேற்கண்ட விபரப்படி ஏதேனும் ஒரு காலிப் பணியிடத்தை எனக்கு ஒதுக்கீடு செய்து பணிநியமனம் வழங்கிட ஆவன செய்யுமாறு கேட்டு தேனி மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் அவர்களுக்கு விண்ணப்பம் செய்து, காலதாமதம் ஏற்பட்டதால், 22.11.2024 நாளிட்ட மேல்முறையீட்டு விண்ணப்பத்தின் மூலம் கருணை அடிப்படையில் பணி நியமனம் செய்ய ஆவன செய்யும்படி தேனி மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் அவர்களுக்கு விண்ணப்பம் செய்ததற்கு மேற்கண்டுள்ளவாறு உரிய காலிப்பணியிடங்கள் இருந்தும் இதுநாள்வரையிலும் கருணை அடிப்படையில் எனது கல்வித் தகுதிக்கு ஏற்ப எனக்கு பணிநியமனம் செய்யாமல் காலதாமதம் செய்து வரும் தேனி மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் மீது சட்டப்படி உரிய நடவடிக்கை மேற்கொண்டு விரைவில் கருணை அடிப்படையில் கல்வித் தகுதிக்கேற்ப பணி நியமனம் செய்ய தேனி மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் அவர்களுக்கு உத்தரவிட்டு மேற்கண்ட பணியிடத்தில் ஏதேனும் ஒரு காலிப்பணியிடத்தை எனக்கு ஒதுக்கீடு செய்து பணிநியமனம் செய்ய உதவி செய்யுமாறு பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

2. முறையீட்டு மனுதாரரின் புகார் மனு மீதான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் 05.03.2025 நாளிட்ட அறிவிப்பு மூலம் தேனி மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநரை கேட்டுக்கொள்ளப்பட்டது.

3. தேனி மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநர், திரு. சா. கிறிஸ்டோபர் தாஸ் என்பவர் தனது 21.05.2025 நாளிட்ட அறிக்கை ந.க.எண். 1360/2024/பேரூ.3 (1)-ல் மனுதாரரின் குற்றச்சாட்டுகளுக்கு முறையே கீழ்க்கண்டவாறு விளக்கம் அளித்துள்ளார்:

"தேனி மாவட்டம், தேனி மண்டலம், க. புதுப்பட்டி பேரூராட்சியில் தூய்மை பணியாளராக பணிபுரிந்து வந்த (லேட்) திருமதி. பா. வெள்ளையம்மாள் என்பவர் 19.06.2023 அன்று பணியிடையே மரணமடைந்துள்ளார். இதனைத் தொடர்ந்து தனியரின் மகனும் வாரிசுதாரருமான திரு. பா. மகேஸ்வரன் என்பவர் தனது கல்வி தகுதிக்கு தகுந்தாற் போல் கருணை அடிப்படையில் பணிநியமனம் வேண்டி 12.07.2024 மற்றும் 25.11.2024 நாளிட்ட மனுவில் தெரிவித்துள்ளார். மேற்படி மனு தொடர்பாக தேனி மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் அலுவலக 14.08.2024 நாளிட்ட கடிதம் ந.க.எண். 1360/2024/பேரூ.3 (1)-ன் வாயிலாக க. புதுப்பட்டி பேரூராட்சி செயல் அலுவலருக்கு உரிய நடவடிக்கை மேற்கொண்டு மனுதாரருக்கு பதிலனுப்ப அறிவுறுத்தப்பட்டது.

அதன்படி, க. புதுப்பட்டி பேரூராட்சியில் பணிபுரிந்து பணியிடையே மரணமடைந்த திருமதி. வெள்ளையம்மாள் என்பவரின் மகன் திரு. மகேஸ்வரன் என்பவருக்கு கருணை அடிப்படையில் வாரிசு நியமனம் செய்வதற்கு அரசாணை (நிலை) எண். 139 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (TP1) துறை, நாள் 03.10.2022-ன்படி அடிப்படை பணியிடங்களான தூய்மை பணியாளர், மின் பணியாளர் மற்றும் குடிநீர் பணியாளர் போன்ற அனைத்து பணியிடங்களும் வெளிமுகமை பணியாளர்களாக அறிவிக்கப்பட்டதால் நேரடி நியமனம் செய்ய

வழிவகை இல்லை எனவும், மனுதாரரின் கல்வி தகுதிக்கு தகுந்தாற்போல் பதிவறை எழுத்தர் அல்லது அலுவலக உதவியாளர் பணியிடம் வழங்க கோரியதில் காலிப்பணியிடம் ஏதும் இல்லாததால் காலியிடம் ஏற்படும்பட்சத்தில் பணிநியமனம் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்ற விவரம் மனுதாரருக்கு தெரிவித்து பதிவஞ்சல் வழி இரண்டு முறை தபால் அனுப்பப்பட்டதில் மனுதாரர் குறிப்பிட்டுள்ள முகவரியில் இல்லை என குறிப்பிட்டு அஞ்சல் திரும்ப வரப்பெற்றுள்ளது. இது தொடர்பாக அக்கம் பக்கத்தினர்களிடம் அலுவலக பணியாளர்கள் விசாரணை செய்ததில் அத்தகைய நபர் யாரும் அந்த முகவரியில் வசிக்கவில்லை என தெரிவித்துள்ளனர். மேலும், கிராம நிர்வாக அலுவலர் சம்பந்தப்பட்ட முகவரியில் மேற்படி மனுதாரர் வசிக்கவில்லை என 29.11.2024 நாளிட்ட கடிதத்தில் சான்று செய்துள்ளார்.

இந்நிலையில், மனுதாரர் இருப்பிடம் சரியான முகவரி அறியாத நிலையில் மனுதாரருக்கு பதில் சார்பு செய்ய இயலவில்லை என க. புதுப்பட்டி செயல் அலுவலரால் அறிக்கை வரப்பெற்றுள்ளது. மேலும் மனுதாரர் குறிப்பிட்டுள்ள வடுகபட்டி, வீரபாண்டி மற்றும் ஓடைப்பட்டி பேரூராட்சிகளில் பதிவறை எழுத்தர் பணியிடம் குறித்து வழக்கு தொடரப்பட்டு தற்பொழுது அப்பணியிடங்களின் பதவி உயர்வு நிலை அரசிடம் நிலுவையில் உள்ளதால் அப்பணியிடங்கள் காலியாக தற்பொழுது இல்லை என்ற விவரம் மனுதாரருக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது என்ற விவரத்தினை பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன் என தெரிவித்துள்ளார்.

4. மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரரான தேனி மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநர், ஆகியோருக்கு இம்முறைமன்ற நடுவத்தில் 26.06.2025 அன்று விசாரணைக்கு ஆஜராகுமாறு 19.06.2025 தேதியிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

5. மனுதாரரான திரு. பா. மகேஸ்வரன் மற்றும் அவரது சகோதரரான திரு. நா. ஜெகநாதன் ஆகியோர் 26.06.2025 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்னிலையில் கீழ்க்கண்டவாறு தங்களது வாக்குமூலங்களை அளித்துள்ளனர்: அதில் –

- "தேனி மாவட்டம், க. புதுப்பட்டி பேரூராட்சியில் தூய்மைப் பணியாளராக பணியாற்றிய எனது தாயார் திருமதி. பா. வெள்ளையம்மாள் என்பவர் 19.06.2023 அன்று பணியிடையில் காலமானதை தொடர்ந்து, கருணை அடிப்படையில் பணி நியமனம் செய்யக் கோரி நான் (பா. மகேஸ்வரன்) 11.12.2023 நாளிட்ட விண்ணப்பம் க. புதுப்பட்டி பேரூராட்சி செயல் அலுவலரிடம் சமர்ப்பித்தேன்.
- எனது விண்ணப்பத்தில் கருணை அடிப்படையில் பணிநியமனம் செய்யக்கோரிய பதிவறை எழுத்தர், அலுவலக உதவியாளர் மற்றும் துப்பரவு பணி மேற்பார்வையாளர் பதவிகள் காலி பணியிடம் இல்லாததால் எனது விண்ணப்பத்தினை பேரூராட்சி செயல் அலுவலர் தனது 23.05.2024 நாளிட்ட கடிதம் மூலம் உரிய மேல்நடவடிக்கைக்காக தேனி மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநருக்கு அனுப்பியுள்ளார்.
- இதற்கிடையில், நான் தேனி மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநருக்கு சமர்ப்பித்த 11.07.2024 நாளிட்ட மனுவில், பேரூராட்சிகளில் பதிவறை எழுத்தர் பணியிடத்தை கருணை அடிப்படையில் மட்டுமே நியமனம் செய்யப்பட வேண்டுமென்ற நிலையில் விதிமீறி தூய்மைப் பணியாளராக பணியாற்றிய திருவாளர்கள் கணேசன், காளியப்பன் மற்றும் மாரிச்சாமி ஆகியோர்கள் முறையே வடுகபட்டி, வீரபாண்டி, ஓடைப்பட்டி ஆகிய பேரூராட்சிகளில் தூய்மைப் பணியாளர் பணியிடத்திலிருந்து பதவி உயர்வு மூலமாக பதிவறை

எழுத்தராக நியமனம் செய்யப்பட்டு பணிபுரிந்து வருகின்றனர் என மகேஸ்வரன் ஆகிய நான் தெரிவித்திருந்தேன்.

- இவ்வாறு விதிமீறி பதவி உயர்வு வழங்கப்பட்ட மேற்காணும் பதிவறை எழுத்தர்களை பதவிநீக்கம் செய்ய வேண்டி தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவ ஆணை எண்.85/பேரூ/2021 நாள் 22.11.2021ல் ஆணையிடப்பட்டும், பதவியிறக்கம் செய்யப்படாததால், அவர்களை பதவிஇறக்கம் செய்து, பதிவறை எழுத்தர் பணியில் எனக்கு கருணை அடிப்படையில் நியமனம் செய்யக் கோரி 11.07.2024 அன்று தேனி மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநருக்கு மனு அளித்தும் இந்நாள் வரை எவ்வித பதிலும் பெறப்படவில்லை என தெரிவித்துக் கொள்கிறோம்.

- மேற்காணும் மூன்று தூய்மைப் பணியாளர்களுக்கு முறைகேடாக பதிவறை எழுத்தர் பணியிடத்தில் பதவி உயர்வு அளிக்கப்படாமல் இருந்திருந்தால் எனக்கு கருணை அடிப்படையில் இவ்வளவு காலதாமதமின்றி முன்கூட்டிய பணிநியமனம் செய்யப்பட்டிருப்பேன் என்பதை தெரிவித்துக் கொள்கிறோம். இவ்வாறு கருணை அடிப்படையில் நியமனம் செய்வதற்கு காலதாமதம் ஏற்பட்டதற்கு காரணமாக இருந்த தேனி மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் மீது உரிய நடவடிக்கை எடுக்க ஆவன செய்யுமாறு இம்முறைமன்ற நடுவத்தை கேட்டுக்கொள்கிறோம்.

- மேலும் 01.07.2024 அன்று முதல் பண்ணைப்புரம் பேரூராட்சியில் அலுவலக உதவியாளர் பணியிடம் மற்றும் அனுமந்தன்பட்டி பேரூராட்சியில் தூய்மைப் பணி மேற்பார்வையாளர் பணியிடம் காலியாக உள்ளது எனவும் தெரிவித்துக் கொள்கிறோம்.

எனவே எங்களது குடும்பத்தில் வருமானம் ஈட்டி வந்த ஒரே நபரான எனது தாயார் காலமானதை தொடர்ந்து வறுமையில் வாடும் எங்களது குடும்ப சூழ்நிலையை கருத்திற்கொண்டு மேற்காணும் காலிப்பணியிடத்தில் எனக்கு கருணை அடிப்படையில் பணிநியமனம் செய்ய ஆவன செய்யுமாறு இம்முறைமன்ற நடுவத்தை பணிவுடன் கேட்டுக் கொள்கிறோம்'' எனத் தெரிவித்துள்ளனர்.

6. எதிர்மனுதாரரான தேனி மண்டல, பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் திரு. சா. கிறிஸ்டோபர் தாஸ் என்பவர் 26.06.2025 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்னிலையில் கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை அளித்துள்ளார்: அதில் –

- ‘‘தேனி மாவட்டம், க. புதுப்பட்டி பேரூராட்சியில் பணியிடையில் 19.06.2023 அன்று காலமான தூய்மைப் பணியாளரான திருமதி. பா. வெள்ளையம்மாள் என்பவரின் மகனும் மற்றும் மனுதாரரான திரு. பா. மகேஸ்வரன் என்பவர் கல்வித் தகுதியின் அடிப்படையில் பணி நியமனம் செய்யக் கோரி 12.07.2024 மற்றும் 25.11.2024 மனுக்களில் விண்ணப்பம் செய்துள்ளார்.

- கருணை அடிப்படையில் நியமனம் செய்யப்படும் பணியிடங்களான தூய்மைப் பணியாளர், மின் பணியாளர் மற்றும் குடிநீர் பணியாளர் போன்ற அனைத்து பணியிடங்களும் அரசாணை (நிலை) எண். 139, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (TP1) துறை நாள் 03.10.2022ல் வெளியிடப்பட்ட

ஆணையின்படி வெளிமுகமை பணியாளர்களாக அறிவிக்கப்பட்டதால் நேரடி நியமனம் செய்ய வழிவகை இல்லை. இந்த விவரம் மனுதாரருக்கு 26.11.2024 நாளிட்ட பேரூராட்சி ந.க.எண். 169/2024 கடிதத்தின் மூலம் தெரிவிக்கப்பட்டது.

- மனுதாரரால் குறிப்பிடப்பட்டுள்ள வடுகபட்டி, வீரபாண்டி மற்றும் ஓடைப்பட்டி பேரூராட்சிகளில் பதிவறை எழுத்தர் பணியிடம் குறித்து வழக்கு தொடரப்பட்டு தற்பொழுது அப்பணியிடங்களில் பதவி உயர்வு நிலை அரசளவில் நிலுவையில் உள்ளதால், அப்பணியிடங்கள் காலியாக தற்போது இல்லை என்ற விவரமும் மனுதாரருக்கு தெரிவிக்கப்பட்டது.

- மனுதாரரின் கல்வி தகுதிக்கு தகுந்தாற்போல் பதிவறை எழுத்தர் (அல்லது) அலுவலக உதவியாளர் பணியிடங்கள் காலியாக இல்லாததால், காலிபணியிடம் ஏற்படும்பட்சத்தில் பணிநியமனம் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

- மேற்காணும் விவரங்கள் தெரிவித்து மனுதாரரின் முகவரிக்கு 2 முறை கடிதங்கள் அனுப்பியும் மனுதாரர் குறிப்பிட்ட முகவரியில் இல்லை என அஞ்சல் திரும்ப வரப்பெற்றுள்ளது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

- இதற்கிடையில் அரசாணை (நிலை) எண். 23 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (TP1) நாள் 21.02.2024ல் வெளியிடப்பட்ட அரசாணையில் பிற பணியிடங்களுடன் பதிவறை எழுத்தர் மற்றும் அலுவலக உதவியாளர் பணியிடங்கள் புதிதாக உருவாக்க ஆணை வெளியிடப்பட்டதைத் தொடர்ந்து அவ்வாணையினை செயல்படுத்தும் வகையில் புதிதாக உருவாக்கப்படவுள்ள பணியிடங்களான – பதிவறை எழுத்தர் மற்றும் அலுவலக உதவியாளர் பணியிடங்களை நிரப்பிடும்பொருட்டு பேரூராட்சிகளின் இயக்குநரிடமிருந்து உரிய செயல்முறை ஆணைகள் பெறப்பட்டு ஜுன் 2025-க்குள் மனுதாரருக்கு கருணை அடிப்படையில் நியமனம் செய்வதற்கு உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை இம்முறைமன்ற நடுவத்தில் பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்” என தெரிவித்துள்ளார்.

7. மனுதாரரின் புகார் மனு மற்றும் மனுதாரர் திரு. பா. மகேஸ்வரன் மற்றும் அவரது சகோதரர் திரு. நா. ஜெகநாதன் ஆகியோர்களின் வாக்குமூலங்கள் மற்றும் எதிர்மனுதாரரான தேனி மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநரின் விளக்க அறிக்கை மற்றும் அவரது வாக்குமூலம் ஆகியவை தொடர்புடைய ஆவணங்களுடன் இம்முறை மன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன.

தேனி மாவட்டம், உத்தமபாளையம் இடத்தைச் சார்ந்த மனுதாரர் திரு. பா. மகேஸ்வரன் என்பவர் தனது 21.01.2025 நாளிட்ட முறையீட்டு மனுவில் தேனி மாவட்டம், க. புதுப்பட்டி பேரூராட்சியில் தூய்மைப் பணியாளராகப் பணிபுரிந்து வந்த மனுதாரரின் தாயார் திருமதி. பா. வெள்ளையம்மாள் என்பவர் 19.06.2023 அன்று பணியிடையில் காலமானதைத் தொடர்ந்து தனக்கு கருணை அடிப்படையில் பணிநியமனம் செய்யக் கோரி மனுதாரர், தேனி மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநரிடம் விண்ணப்பம் அளித்தும் இந்நாள்வரை பணிநியமனம் செய்யப்படவில்லை என புகார் தெரிவித்துள்ளார்.

மேலும், தேனி மாவட்டம், க. புதுப்பட்டி பேரூராட்சியில் மனுதாரரின் தாயார் திருமதி. பா. வெள்ளையம்மாள் தூய்மை பணியாளராக பணிபுரிந்த காலத்தில் 19.06.2023 அன்று

காலமானதைத் தொடர்ந்து மனுதாரர் கருணை அடிப்படையில் பணிநியமனம் செய்யக்கோரி க. புதுப்பட்டி பேரூராட்சி செயல் அலுவலருக்கு 11.12.2023 நாளிட்ட விண்ணப்பத்தை சமர்ப்பித்திருப்பதும்,

மனுதாரர் தனது மனுவில் கோரியிருந்த பதிவறை எழுத்தர், அலுவலக உதவியாளர் மற்றும் துப்புரவு பணி மேற்பார்வையாளர் பதவிகள் காலி பணியிடம் இல்லாததால் அவரது விண்ணப்பம் உரிய நடவடிக்கைக்காக தேனி மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநருக்கு அனுப்பி வைக்கப்பட்டிருப்பதும்,

தேனி மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநருக்கு மனுதாரரால் சமர்ப்பிக்கப்பட்ட 11.07.2024 நாளிட்ட மனுவில் வடுகபட்டி, வீரபாண்டி மற்றும் ஓடைப்பட்டி ஆகிய பேரூராட்சிகளில் தவறான முறையில் விதிகளுக்கு புறம்பாக தூய்மைப் பணியாளர் பணியிலிருந்து பதவி உயர்வு மூலமாக பதிவறை எழுத்தர் பணியிடங்கள் நிரப்பப்பட்டுள்ளனர் எனவும், அவர்களை பதவி இறக்கம் செய்து தன்னை அப்பணியிடத்தில் கருணை அடிப்படையில் பணிநியமனம் செய்யக் கோரியிருப்பதும், 01.07.2024 அன்று முதல் பண்ணைப்புரம் பேரூராட்சியில் அலுவலக உதவியாளர் பணியிடம் மற்றும் அனுமந்தன்பட்டி பேரூராட்சியில் தூய்மை பணி மேற்பார்வையாளர் பணியிடம் காலியாக உள்ளது எனவும் மனுதாரர் தெரிவித்து அதில் பணிநியமனம் செய்யக் கோரியிருப்பதும் அறிய முடிகிறது.

கருணை அடிப்படையில் நியமனம் செய்யப்படும் பணியிடங்களான தூய்மை பணியாளர், மின் பணியாளர் மற்றும் குடிநீர் பணியாளர் போன்ற பணியிடங்கள் அரசாணை (நிலை) எண். 139, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (TP1) துறை நாள் 03.10.2022ல் வெளியிடப்பட்ட ஆணையின்படி வெளிமுகமை பணியாளர்களாக அறிவிக்கப்பட்டதால் நேரடி நியமனம் செய்ய வழிவகை இல்லை என தெரிவித்து இருப்பதை தேனி மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநரின் வாக்குமூலம் வாயிலாக தெரிய வருகிறது.

மேலும் மனுதாரர் புகாராக தெரிவித்துள்ள வடுகபட்டி, வீரபாண்டி மற்றும் ஓடைப்பட்டி பேரூராட்சிகளில் பதிவறை எழுத்தர் பணியிடம் குறித்து வழக்கு தொடரப்பட்டு தற்போது அப்பணியிடங்கள் பதவி உயர்வு நிலை அரசளவில் நிலுவையில் உள்ளதால் அப்பணியிடங்களும் காலியாக தற்போது இல்லை என்பதை தேனி மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநரின் அறிக்கை மூலம் தெரிய வருகிறது.

இருப்பினும், அரசாணை (நிலை) எண். 23, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (TP1) துறை நாள் 21.02.2024ல் வெளியிடப்பட்ட அரசாணையில் பதிவறை எழுத்தர் மற்றும் அலுவலக உதவியாளர் பணியிடங்கள் புதிதாக உருவாக்க ஆணை வெளியிடப்பட்டதை தொடர்ந்து மேற்காணும் பணியிடத்தில் பணிநியமனம் செய்யும்பொருட்டு பேரூராட்சிகளின் இயக்குநரிடமிருந்து உரிய செயல்முறை ஆணைகள் பெறப்பட்டு ஜூன் 2025-க்குள் மனுதாரருக்கு கருணை அடிப்படையில் நியமனம் செய்வதற்கு உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என தேனி மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் தெரிவித்திருப்பது அவரது வாக்குமூலம் வாயிலாக அறிய வருகிறது.

மேற்காணும் நிலையில் தேனி மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் தனது வாக்குமூலத்தில் ஜூன் 2025க்குள் நியமனம் செய்வதாக தெரிவித்துள்ளபடி, புதியதாக உருவாக்கப்பட்ட பதிவறை எழுத்தர் / அலுவலக உதவியாளர் பணியிடத்தில் மனுதாரர் திரு. பா. மகேஸ்வரன் என்பவருக்கு கருணை அடிப்படையில் நியமனம் செய்வதற்கு உரிய தொடர் நடவடிக்கையை துரிதமாக மேற்கொள்ளுமாறு தேனி மண்டல பேரூராட்சிகளின் உதவி

இயக்குநரை அறிவுறுத்தலாம் என இம்முறைமன்ற நடுவம் முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது.

2025-ஆம் ஆண்டு ஜுலை திங்கள் 10-ஆம் நாள் என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

1) திரு. பா. .மகேஸ்வரன்,
த/பெ. பா. பாண்டியன்,
கதவு எண். 35/A-9, மாதாரி தெரு
க. புதுப்பட்டி,
தேனி மாவட்டம் - 625 556.

2) பேரூராட்சிகளின் உதவி இயக்குநர்,
தேனி மண்டலம், தேனி மாவட்டம்.

3) பேரூராட்சிகளின் இயக்குநர்,
பேரூராட்சிகளின் இயக்குநரகம்,
இராஜா அண்ணாமலைபுரம்,
எம். ஆர்.சி நகர், சென்னை–600 028.

4) இணை இயக்குநர் / ஒருங்கிணைப்பு அலுவலர் (Nodal Officer).
(பெயரிட்ட உறையில்)
பேரூராட்சிகளின் இயக்குநர்,
இராஜா அண்ணாமலைபுரம், எம். ஆர்.சி நகர், சென்னை–600 028.

<u>நகல்</u>

மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச் செயலர்.
இகோ/உதிரிகள்.

//ஆணைப்படி /அனுப்பப்படுகிறது //

செயலாளர்